**தலைப்பு 151 – கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு**

-----------------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 151 - கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 27 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஜூன் 20 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களினால், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்கள் தொடர்பாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் மீது எனது அபிப்பிராயம் முளைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள அமைச்சின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) நிதியல்லாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கணனி அச்சகக் குறிப்பு இலக்கம் SA10 செலவின பொழிப்பு படிவத்தின் பிரகாரம் 2024 ஆண்டில் மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான மூலதன செலவினம் ரூபா 2,617,782,669 ஆன போதும் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக 2024 ஆண்டில் சுவீகரிப்பாக ரூபா 2,615,558,561 தொகை காண்பிக்கப்பட்டுள்ளதால் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் கொள்வனவுகளில் ரூபா 2,224,108 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | இந்த அபிவிருத்தி கருத்திட்டங்கள் கடந்த ஆண்டிலும் செயற்பட்ட கருத்திட்டங்கள் ஆகையால் சில அபிவிருத்தி கருத்திட்டங்களில் சொத்துக்கள் கடந்த ஆண்டு சொத்துக்களில் சேர்ப்பனவாக தொகுதியில் உள்ளடக்கப்பட்டதால் 2024 ஆண்டில் கொள்வனவாக தொகுதியினுள் காண்பிக்கப்படவில்லை. இதன் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படும் போது அவைகள் அந்த ஆண்டினுள்ளே சொத்துக்களாக வேறாக உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மூலதன சொத்துக்களை சுவீகரித்தல் சரியாக நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | 2023 பண்டக கணிப்பீட்டிற்கு உரியதாக பராதீனம் செய்ய வேண்டிய ரூபா 79,770 ஆன மதிப்பீட்டு பெறுமதியுடன் கூடிய பொருட்கள் 2024 ஜுலை 25 ஆம் திகதி ரூபா 168,820 இற்கு ஏலவிற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் அந்த பராதீனம் செய்யப்பட்ட பொருட்களின் கிரயத்தை நிதிக் கூற்றுக்களில் SA82 திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கூற்றியிலிருந்து அகற்றி இருக்காததுடன் அதன் காரணமாக நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் சொத்துக்கள் அகற்றுதலின் மீதி சரியானதாகவில்லை. | பராதீனம் செய்யப்பட்ட பொருட்களை இந்த ஆண்டின் போது தொகுதிக்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பராதீனம் செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் அகற்றுதலில் உள்ளடக்க வேண்டும். |

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மீண்டுவரும் மற்றும் மூலதன செலவுகளிற்காக தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரான்மை மற்றும் இலங்கை கடற்றொலில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு முறையே ரூபா 850,000,000 ஆன, ரூபா 600,000,000 ஆன மற்றும் ரூபா 400,000,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே குறைநிரப்பு நிதிஏற்பாடு மூலம் மீன்பிடி பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திற்காக ரூபா 97,874,000 ஆன மேலதிக நிதி ஏற்பாடுகளை தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கப்ட்டிருந்தது. இந்த 03 அரச நிறுவனங்களும் அமைச்சின் கீழ் ஒழுங்கமைக்கப்ட்ட போதும் 2024 ஆண்டில் வழங்கப்பட்ட இந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து செலவு செய்யப்பட்ட ரூபா 1,800,563,766 ஆன தொகை தொடர்பாக அவை செலவிடப்பட்ட விதம் பற்றிய விபரங்கள் உள்ளடங்கிய செலவின அறிக்கை, தகவல்கள் மற்றும் அந்த ஒவ்வொரு கருத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக வெவ் வேறாக இனங்காண முடியுமானவாறு தயாரிக்கப்பட்ட தகவல் அறிக்கையையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காததால் அச் செலவுகளின் சரியான தன்மை பற்றி கணக்காய்வின் போது உறுதி செய்து கொள்ள முடியவில்லை. கடற்றொலில் அமைச்சின் 2024 ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் முக்கியமான பணியொன்றாக அரசின் ஊடாக செயற்படுத்தப்படும் தேசிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கடற்றொலில் விடயங்களிற்கு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களிற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உறுவாக்கல், செயற்படுத்துதல், பின்தொடருதல் மற்றும் மதிப்பீடு செய்தல் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அமைச்சினால் இந்த நிறுவனங்கள் தொடர்பாக பின்தொடருதல் மற்றும் மதிப்பிடல் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை | இந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து மீண்டுவரும் செலவினம் கழிக்கப்பட்ட பின்னர் எஞ்சிய மூலதன நிதி ஏற்பாடு ரூபா மில்லியன் 449.89 இற்குரியதாக பின்தொடர் மற்றும் மதிப்பீடு செய்தல் இந்த அமைச்சின் திட்டமிடல் பிரிவு மற்றும் அபிவிருத்தி பிரிவு ஊடாக காலாண்டு ரீதியாக மேற்கொள்ளப்படுகிறது. விஷேட சந்தர்ப்பங்களின் போது தேவையான அறிவுரைகளும் வழங்கப்படுகிறது. அதற்கு மேலதிகமாக இந்த நிறுவனங்கள் மாதாந்த கட்டுநிதி தேவைபாட்டை கோரும் போதும் நிதி ஏற்பாட்டை பயன்படுத்திய விதத்தை காண்பிக்கும் தகவல்கள் கணக்கு பிரிவின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகிறது. | மீன்பிடி விடயத்திற்கு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திணைகளங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களிகுரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதல், செயற்படுத்துதல், பின்தொடருதல் மற்றும் மதிப்பிடல் தொடர்பாகவும் அமைச்சினால் பின்தொடருதல் மற்றும் மதிப்பிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாகும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தி தொடர்ப்பு | செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தி தொடர்ப்பு |
|---|---|---|
| 1.6.1 (உ) | கணக்காய்விற்கு தேவையான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமை. | 1.6.1 (இ) |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 5 செலவின விடயங்களிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,570,151 ஆன் முழுமையான நிதி ஏற்பாடுகளும் எஞ்சியிருந்தன. | அமைச்சரவை அலுவலக கருத்திட்டம் வீதவரி மற்றும் குத்தகைக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு நிறுவனம் மற்றும் நிர்வாக கருத்திட்டத்தின் வீதவரி மற்றும் குத்தகை 151-1-2-0-1404 செலவின விடயத்திற்காக ஒதுக்கப்ட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து செலுத்துதல், வாகன காப்புறுதி செலவினத்திற்காக செலுத்துதல் அமைச்சு நிர்வாக கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து மேற்கொள்ளல், 2024 ஆண்டின் போது இடம்பெற்ற ஆட்சி முறையின் மாற்றங்கள் மீது அமைச்சு அலுவலகங்களில் செலவு செய்தல் மட்டுப்படுத்தப்பட்டமையால் 151-1-1-0-2001-0/11 மற்றும் 151-1-1-0-2002-0/11 செலவின விடயங்களில் நிதி ஏற்பாடு எஞ்சியமை மற்றும் செயற்பாட்டு வாடகை கொள்வனவின் கீழ் வாகனமொன்றை கொள்வனவு செய்வதற்கு பதிலாக அமைச்சில் இருந்த பழைய வாகனமொன்றை திருத்தி குறித்த உத்தியோகத்தருக்கு இணைக்கப்பட்டதால் நிதிஏற்பாடு விஞ்சியுள்ளது. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை எதிர்பார்த்த பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். |

### 3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடற்றொழில் அமைச்சினால் பேணிச் செல்லும் பொறுப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்பு மீதி ரூபா 1,190,000 ஆனதுடன் SA 92 திறைசேரி திரண்ட கடப்பாட்டு பொறுப்பு அறிக்கையின் பிரகாரம் அத்திகதியில் பொறுப்பு மீதி ரூபா 1,790,000 ஆனதால் ரூபா 600,000 ஆன வித்தியாசம் நிலவியது. | இது மன்னார் மாவட்ட செயலகத்தினால் 2022 ஆண்டின் போது அறிக்கை இடப்பட்டிருந்த பொறுப்புகளின் கூட்டுத்தொகை ஆவதுடன் அந்த மாவட்ட செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டு அதை இவ்வாண்டின் போது பொறுப்பு அறிக்கையிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | பொறுப்பு பதிவேடு மற்றும் SA 92 திறைசேரி திரண்ட கடப்பாட்டு பொறுப்பு அறிக்கையின் பிரகாரம் பொறுப்பு மீதியில் காணப்படும் வித்தியாசத்தை இனஙகண்டு தேவையான செம்மையாக்களை மேற்கொள்ள வேண்டும் |

## 3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள

| கணக்காய்வு அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்ப்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவை | | | |
| நி.பி. 104(1) | நாரஹேன்பிட, முஹந்திரம் ஈ.பீ.தாபரே மாவத்த இலக்கம் 18/146 B எனும் இடத்தில் அமைந்திருந்த கடற்றொழில் அமைச்சின் செயலாளர் பதவிற்காக ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்காக கடற்றொழில் அமைச்சின் பொருட் பதிவேட்டிலிருந்து வழங்கியிருந்த அனைத்து அரச பொருட் பதிவேட்டு பொருட்களும் காணாமல் போயுள்ளதாக 2023 ஆண்டு பண்டக கணிப்பீட்டு அறிக்கை மூலம் அறிக்கை இடப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கதவு ஜன்னல் பூட்டு மற்றும் கட்டிட பொருத்திகளும் கலற்றிச் செல்லப்பட்டிருந்தன. இது தொடர்பாக இடம் பெற்றிருந்த ரூபா 1,808,262 ஆன நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்புவாய்ந்த தரப்பினர்களை இனங்கண்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 104 பிரகாரம் ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது தொடர்ாக நாரஹேன்பிட பொலிஸ் நிலையத்திற்கு முறைபாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் இந்த நட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுத்து அதற்கான பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களை இனங்காண்டு நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**3.4 வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் “மீனவத் தினம் 2023” நிகழ்ச்சித் திட்டத்திற்காக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களிலிடமிருந்து கிடைத்திருந்த நிதியிலிருந்து செலவிடப்படாது எஞ்சியிருந்த ரூபா 747,736 ஆன தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மீனவத் தின நிகழ்ச்சித் திட்டத்திற்காக கிடைத்த நிதி உதவியின் கீழ் ரூபா 447,736.5 ஆன தொகை 2025.03.24 ஆம் திகதி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை தொடர்பாகவும் எதிர்காலத்தில் பொருத்தமான செயற்பாடுகள் எடுக்கப்படும். | நிகழ்ச்சித் திட்டத்திற்காக கிடைத்திருந்த நிதியை குறித்த ஆண்டின் நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவிட வேண்டும். |

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆண்டு வருடாந்த செயல் நடவடிகடகை திட்டத்தில் உள்ளடங்கப்பட்ட கடற்றொலில் பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திற்குரிய 05 கருத்திட்டங்களிற்காக கூட்டுத்தொகை ரூபா 82,500,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும் அதற்குரிய பௌதீக செயலாற்றுகை 04 கருத்திட்டங்களில் 50 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் ஒரு கருத்திட்டத்தின் செயலாற்றுகை 50 சதவீதமாக இருந்தது. அவ்வாறே வருடாந்த செயல் நடவடிககை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இன்னும் ஒரு கருத்திட்டத்திற்குரிய பௌதீக செயளாற்றுகை எவ்வளவு என்பது கணக்காய்விற்கு வெளிப்படவில்லை. | அருகம்பே களப்பில் உத்தேச அகழ்விற்காக NARA நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய ITI அறிக்கை மற்றும் அருகம்பே மணல் அகழ்வு தொடர்பாக இறுதி BOQ (அளவுகளின் விலைச் சுட்டி) மீது மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் இறுதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நந்திக்கடல் களப்பு மற்றும் களிமுகத்தில் திரளும் மணலை அகற்றுவதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள தயாரிக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானம் கிடைத்துள்ளது. NARA நிறுவத்தால் தயாரிக்க வேண்டிய நயாரு களப்பினை சுத்திகரிப்பதற்கான ஆரம்ப சுற்றாடல் (IEE) அறிகை தயாரிக்கும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தில் செயற்படல் மற்றும் 1.3 கருத்திட்டத்திற்காக நந்திகடல் மற்றும் கோக்கிலாய் களப்புகளில் காணிப் பிரச்சினை காணப்படல் மற்றும் 1.4 கருத்திட்டத்திற்கான திட்டம் மாற்றமடைந்த காரணத்தால் கருத்திட்டத்தை நிறுத்தியமை மற்றும் 1.7 கருத்திட்டத்திற்காக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படாததால் கருத்திட்டம் செயற்படாமை இந்த அலுவலகங்களில் பௌதீக செயலாற்றுகை குறைவடைய காரணமாகவுள்ளது. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கும் திட்டமிடப்பட்ட பணிகளை போதியளவில் அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.2 கருத்திட்டங்களை மேற்கொள்வதன் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 06 திகதி நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய வேண்டியிருந்த கந்தர மீன்பிடி துறைமுக கருத்திட்டத்தின் ஒப்பந்த காலம் 2024 திசெம்பர் 23 திகதி வரை நீடித்துக் கொள்ளப்பட்டிருந்தது. அத் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் 38 இற்காக (Interim Payment Certificate) அமைச்சினால் நிதிக் கொடுப்னவு தாமதித்த காரணத்தால் குறித்த ஒப்பந்த கம்பனிக்கு 2024 திசெம்பர் 31 திகதி ரூபா 206,826,720 தொக தாமத வட்டிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு மேலதிக தாமத வட்டி செலுத்துவதற்காக அரச நிதி ஏற்பாட்டை பயன்படுத்த நேரிட்டதனூடாக அப் பெறுமானத்தால் அரசிற்கு நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. | அமைச்சின் அபிவிருத்தி பிரிவினூடாக பதில் அழைப்பித்துள்ளதுடன் பதில் கிடைத்தவுடனே சமர்ப்பிக்கிறேன். | கருத்திட்ட செயற்பாடுகளை உரிய திகதியில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தாமத வட்டி செலுத்தியது தொடர்பாக குறித்த நிறுவனத்துடன் கலந்துரையாடி நட்டத்தை குறைத்துக் கொள்ள நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தேசிய நீர் வளங்க்ள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரான்மையினால் 2023/2024 ஆண்டில் களப்பினுள் இறால் குடம்பிகளை வைப்புச் செய்யும் கருத்திட்டத்தின் மூலம் 15,000,000 குடம்பிகளை உற்பத்தி செய்ய மதிப்பிட்டிருந்ததுடன் அக் கருத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை பிரகாரம் அன்னளவாக 3,444,000 குடம்பிகள் வைப்புச் செய்யப்பட்டிருந்தன. கருத்திடட்த்திற்காக பயன்படுத்திய இனவிருத்தி நிலையத்தில் இறால் குஞ்சிகள் மற்றும் தாய் விலங்குகள் நோய்க்காவிகளாகிய காரணத்தால் இந்த விலங்குகளை இனவிருத்தி நிலையங்களிலிருந்து அகற்றி தொற்று நீக்க நேரிட்டதால் மேற்குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்த முடியவில்லை. இக்கருத்திட்டத்திற்காக 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் அமைச்சினால் ரூபா 20,317,000 செலவிட்டிருந்ததுடன் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாது கருத்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. | குஞ்சிகளை பெற்றுக் கொள்ள இனவிருத்தி நிலையத்திற்கு எடுத்து வரும் அந்த விலங்குகள் மற்றும் குடம்பிகளிற்கு தொற்றும் 08 வகை நோய்களிற்கு பரிசோதனை செய்து ஒரு நோய்க்காவது நேர் நிலையானால் அந்த விலங்குகளை இனவிருத்தி நிலையத்திலிருந்து அகற்றி தொற்று நீக்கப்படும். மேலும் குஞ்சிகளை 30 நாட்கள் அளவு இனவிருத்தி நிலையத்தில் வளர்த்து அந்த விலங்குகளிற்கும் மேற்குறித்த 08 வகை நோய்களிற்கு பரிசோதனை செய்து மாதிரி நேர் நிலையானால் அந்த விலங்குகளும் அகற்றப்படும். இந்த செயன்முறையின் மீது எதிர்பார்த்தவாறு இலக்கை அடைவது கடினமாகும் என தேசிய நீரியல்வள ஆராய்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை குறிப்பிட்டுள்ளது. | கருத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளுவும் தேவையான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செய்யப்பட வேண்டும். |

**4.3 பெறுகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஆலோசகர்களை தெரிவு செய்யும் மற்றும் பணிக்கமர்த்தும் வழிகாட்டிக் கோவையின் 4.4 பிரிவின் பிரகாரம் பெறுகை நிறுவனத்தால் நேரடியாக உட்படுத்தியுள்ள அல்லது பத்திரிகை அறவித்தலிற்கு விருப்பம் தெரிவித்துள்ள விண்ணப்பதாரர் மூவர் அல்லது அதிக அளவினரின் தகைமைகளை ஒப்பிட்டு தனிப்பட்ட ஆலோசகர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய போதும், அமைச்சில் மீன்பிடி துறைமுக கருத்திட்ட ஆலோசகர் பதவியான மீள்குடியேற்றம் மற்றும் காணி சுவீகரிப்பு நிபுணர், உதவி பொறியியலாளர் மற்றும் அளவுகள் பரிசோதகர் எனும் பதவிகளிற்கு ஒரு பதவிக்கு ஒர் விண்ணப்பம் வீதம் சமர்ப்பித்திருந்த அந்த தனி நபர்களிற்கு ஒப்பந்தத்தை வழங்கியிருந்ததுடன் சேவை வழங்குனர் பிரதி கருத்திட்ட பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்த இருவர்களில் ஒருவரிற்கு ஒப்பந்தத்தை வழங்கி 2024 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 20,724,925 தொகை செலுத்தப்பட்டு இருந்தது. | இந்த உத்தியோகத்தரை ஆட்சேர்த்தல் தேசிய பெறுகைகள் விலைமனு கோரலின் கீழ் செய்யப்பட்டதுடன் அரசிற்கு மிகவும் நலன்தரக்கூடிய மற்றும் பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வ தன்மையை கவனத்திற் கொண்டு தெரிவு செய்யப்பட்டுள்ளது. | ஆலோசர்களை தெரிவு செய்யும் மற்றும் பணிக்கமர்த்தும் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மேற்குறித்த ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக வெளியிட்ட 2021 ஆகஸ்ட் 16 திகதிய பத்திரிகை அறிவித்தலில் மீன்பிடி துறைமுக கருத்திட்டத்திற்காக தனிப்பட்ட மதியுரை சேவைக்காக ஆட்சேர்க்க வெளியிடப்பட்டிருந்தது. உடன்படிக்கை கைச்சாத்திடும் போது கந்தர மீன்பிடி துறைமுக கருத்திட்டத்திற்காக மாத்திரம் தனிப்பட்ட ஆலோசகர்களாக இருதரப்பினால் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டு இருந்தது. இதன் காரணமாக அப் பதவிக்காக சரியான தகவல்களை உள்ளடக்கி பத்திரிகை அறிவித்தல் வெளியிடாத காரணத்தால் மிகவும் தகைமையான ஆலோசகர்களை தெரிவு செய்ய இருந்த சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டிருந்தது. | அமைச்சின் அபிவிருத்தி பிரிவினூடாக பதில் அழைப்பித்துள்ளதுடன் பதில் கிடைத்தவுடனே சமர்ப்பிக்கிறேன். | ஆட்சேர்ப்பு பதவி தொடர்பாக சரியான தகவல்களை உள்ளடக்கி பத்திரிகை அறிவித்தல் வெளியிட வேண்டும். |

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 29 திகதி வத்தளை பிரசேத செயலாளரினால் காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரகாரம் திக்ஓவிட இற்கு மீன்பிடி துறைமுகத்தில் அமைந்துள்ள இலக்கம் SSP 430 வரிபடத்தின் லொட் X ஆக காண்பித்துள்ள 110 பர்சஸ் காணியை ஒப்படை உரிதியின் மூலம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் சட்டரீதியான உரிமை இல்லாத மேற்குறித்த காணித் துண்டை 2021 ஒக்டோபர் 04 திகதி முதல் 20 ஆண்டு காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றிற்கு குத்தகை வழங்கியிருந்ததுடன் இது அமைச்சின் மேற்பார்வையிற்கு அப்பால் இடம்பெற்றிருந்தது. 2024 திசெம்பர் 31 திகதி வரை அமைச்சினால் இந்த காணியை சட்டரீதியாக மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன் இதன் காரணமாக 2024 திசெம்பர் 31 திகதி வரை அந்த தனியார் கம்பனியிடமிருந்து ரூபா 2,335,438 தொகையான நிலுவை குத்தகை தொகையை மற்றும் 2 சதவீத தாமதக் கட்டணத்தையும் அறவிட குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிடப்படும் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள கூட்டுத்தாபனத்திற்கு இயலாதிருந்தது. | அமைச்சின் அபிவிருத்தி பிரிவினூடாக பதில் அழைப்பித்துள்ளதுடன் பதில் கிடைத்தவுடனே சமர்ப்பிக்கிறேன். | தனியார் கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,335,438 நிலுவை குத்தகை தொகையை மற்றும் 2 சதவீத தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்காக குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிடப்படும் சட்ட நவடிக்கை எடுக்க அமைச்சினால் இந்த காணித் துண்டை சட்ட ரீதியாக மீன்பிடி துறைமுங்கள் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடற்றொலில் அமைச்சு அமைந்துள்ள கட்டிடத்தில் மேலதிக மூன்று மாடிகளை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு செல்கையில் ஒப்பந்த கம்னியின் கவனயீனம் காரணமாக கட்டிடத்தின் பீம் மற்றும் ஸ்லெப் ஊடாக மழைநீர் கசிவதால் ஆறாம் மாடி மற்றும் ஐந்தாம் மாடிகளில் பொருட்கள் மற்றும் ஆதனங்களிற்கு ஏற்பட்டுள்ள சேதத்தை நிதிப்பிரமாணம் 103 இன் கீழான சேதமென 2024 ஜுன் 12 திகதிய நிதிப்பிரமாணம் 104 விசாரணை அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்படடு இருந்ததுடன் அதனால் அமைச்சிற்கு ஏற்பட்ட ரூபா 610,996 இற்கு அதிக நட்ட ஈட்டிற்குறிய மொத்த செலவையும் ஒப்பந்த கம்பனியிடமிருந்து அறவிடுவது பொருத்தமென அந்த அறிகை மூலம் பரிந்துரைத்துள்ள போதும் அறவிட்டிருக்கவில்லை. | தகவல் அறிக்கையிடலின் வழுவின் காரணமாக இந்த தகவல் அந்த கூற்றில் அறிக்கையிடப்படவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்க உத்தியோகத்தரகளிற்கு அறிவுரை வழங்கப்பட்டது. | நட்ட ஈட்டிற்குறிய மொத்த செலவையும் அறவிடுவது பொருத்தமென அந்த அறிக்கை மூலம் பரிந்துரைத்துள்ளதால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.6 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023/2024 ஆண்டுகளில் செயற்படுத்திய களப்பில் இறால் குடம்பிகளை வைப்புச் செய்யும் கருத்திட்டம் தொடர்பாக அமைச்சின் செயலாளரினால் தேசிய நீர் வளங்கள் ஆராய்சி மற்றும் அபிவிருத்தி முகவரான்மையின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிய 2023 நவம்பர் 06 திகதிய இலக்கம் MF/SD/03/NARA/02-2023 கொண்ட கடிதம் பிரகாரம் வர்த்தக இறால் கைத்தொழிலிற்கு நோய் தொற்றுவதை தடுப்பதற்கு இறால் குடம்பிகளை உற்பத்தி செய்யும் இந்த இனவிருத்தி நிலைய செயன்முறையை தீவிரமாக மேற்பார்வை செய்ய வேண்டுமெனவும், அதன் பிரகாரம் NARA நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவரை இனவிருத்தி நிலையங்களின் நடவடிக்கைகளை மேற்பார் வைக்காக முழுநேரமாக ஈடுபடுத்தி பௌதீக ரீதியாக மேற்பார்வை செய்வது கட்டாயமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் NARA நிறுவனத்தினால் இனவிருத்தி நிலைய மேற்பார்வைக்காக முழுநேர உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்தியிருந்தமைகான எவ்வித சான்றுகளும் கணக்காய்வின் போது அவதானிக்கப்படாததுடன் NARA நிறுவனத்திற்கு அனுப்பிய மேற்படி கடிதத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக அமைச்சினால் பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | அமைச்சின் அபிவிருத்தி பிரிவினூடாக பதில் அழைப்பித்துள்ளதுடன் பதில் கிடைத்தவுடனே சமர்ப்பிக்கிறேன். | குறித்த செயன்முறைகள் தொடர்பாக தேவையான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 5. மனித வள முகாமைத்துவம்.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடற்றொழில் அமைச்சில் சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்திலான 30 பதவிகளுக்குரிய 09 வெற்றிங்டகளும், மூன்றாம் மட்டத்திலான 04 பதவிபளுக்குரியதாக ஒரு வெற்றிடமும், இரண்டாம் மட்டத்திலான 164 பதவிகளுக்குரிய 69 வெற்றிடங்களும், ஆரம்ப மட்டத்திலான 40 பதவிபளுக்குரியதாக 03 வெற்றிடங்களும் மற்றும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏனைய மட்டத்திலான 03 பதவிபளுக்குரியதாக 02 வெற்றிடங்களும் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2025 ஜுலை 24 திகதி வரை அமைச்சிற்கு இயலாதிருந்தது. | காணப்படும் வெற்றிடங்களை நிரப்புமாறு கோரி 2025.03.04 திகதிய கடிதம் பொது நிர்வாக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | முக்கியமான பதவிகளில் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சனாதிபதி செயலாளரின் 2010 மே 14 ஆம் திகதிய இலக்கம் சீஏ/1/17/1 கொண்ட கடிதத்தின் 2.1 பத்தியின் பிரகாரம் ஒரு கௌரவ அமைச்சரின் அலுவலகங்களில் பணிக்கமர்த்தப்படும் உதவி ஆளணியினர் 15 இனை விஞ்சாதிருக்க வேண்டிய போதும் 2024 திசெம்பர் 31 திகதியன்று உள்ளவாறான அமைச்சின் ஆளணி 19 ஆனது. அதன் பிரகாரம் ஆளணியில் 04 ஊழியர்கள் மிகையாக இருந்தனர். மேலும், உதவி செயலாளர் (தொழிற்சங்கம் மற்றும் ஊழியர் உறவுகள்) எனும் பதவி இந்த சுற்றறிக்கையின் 2.1 பந்திக்கு முரணான ஒரு பதவியாக காணப்பட்டது. | 2020.09.21 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் அமைச்சின் ஆலோசகர் பதவிக்கு ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், சனாதிபதியின் செயலாளரின் இலக்கம் PS/CSA/00/03/16 மற்றும் 2022.03.02 திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சு ஆளணியினரிற்காக மேலும் ஒரு ஆலோசகரை நியமிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சனாதிபதியின் செயலாளரின் இலக்கம் சீஏ/1/17/1 மற்றும் 2010.05.14 திகதிய கடிதத்தின் பிரகாரம் ஊடகச் செயலாளர் ஒரு உத்தியோகபூர்வ வாகனத்தை வைத்திருப்பதால் சாரதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். 2020.12.14 திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் உதவிச் செயலாளர் (தொழிற்சங்க உறவுகள்) பதவிக்கு ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். | சனாதிபதியின் செயலாளரின் 2010 மே 14 திகதிய இலக்கம் சீஏ/1/17/1 கடிதத்தின் 2.1 பந்தியில் குறிப்பிடப்படும் பதவி அளவை விஞ்சாதவாறு ஆட்சேர்ப்பு மேற்கொள்ள வேண்டும். |